கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள், வெள்ளிக்கிழமை

இடைநிலை மனு எண்.8/2025
இன்
அசல் வழக்கு எண்.320/2018

* * * *

ராஜேஸ்வரி
(அவரது பவர் ஏஜெண்ட் கணேசமூர்த்தி
என்ற கேபிள் கணேசன் மூலம்) ... மனுதாரர்/வாதி

/ எதிரிடை /

பாக்கியம் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இறுதியாக இம்மனுவானது 23.01.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.G.சங்கர்கணேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.குருராஜ் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்.</u>**

மனுதாரர்/வாதி தரப்பு மனுவில், அசல் வழக்கில் ஏற்கனவே 02.12.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கையினை நீக்கரவு செய்தும், மீண்டும் வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்தினை அளந்து இயற்கை அமைப்பு, நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்துடன் அறிக்கை சமர்ப்பிக்க உத்திரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3) தீர்வு:–</u>**

இருதரப்பு வாதத்திற்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

3.1) இம்மனுவானது வழக்கு சொத்தை பொறுத்து, வழக்கறிஞர்/கமிஷனர் 02.12.2021ம் தேதி தாக்கல் செய்த அறிக்கையும்,

நில அளவை வரைபடமும் பொருந்தவில்லை என்பதையும், முரண்பாடு இருப்பதையும் காட்டுவதாக உள்ளது என்றும், எனவே வழக்கு சொத்தை ஆய்வு செய்வதற்கும், அதை அளவிடுவதற்கும், நான்கு எல்லைகளையும், அளவையும் கண்டுபிடித்து, தீர்ப்பை வழங்குவதற்கு வசதியாக, நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவா அசல் வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும், வழக்கு தரப்பினர்களுக்கு இடையேயான பிரச்சனைக்கு தீர்வு காணும் விதமாக வழக்குச்சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்கவேண்டியது சட்டப்படியானதாகும்.

3.3) இந்நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தினை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிப்பதால், மேற்படி அசல் வழக்கு விசாரணைக்கு அது உரிய நடவடிக்கையாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதினால் இருதரப்பில் எவ்வித பாதகமும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில்கொண்டும், தரப்பினர்களுக்கு

இடையேயான பிரச்சனைக்கு மேற்படி, மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் ஒரு சரியான தீர்வை காண வழிவகை செய்ய உதவும் என்பதை கருத்தில் கொண்டும், 02.12.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கையினை நீக்கரவு செய்தும், வழக்குச்சொத்தை மீண்டும் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. மேற்படி வழக்கு சொத்தினை அளவீடு செய்ய கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராகவன் என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். மேற்படி நீதிமன்ற ஆணையரின் கட்டணமாக ரூ.8,000/− நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையருக்கான கட்டணத்தை இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் நீதிமன்ற ஆணையர் வசம் நேரடியாக வழங்க வேண்டும் என்றும், மேற்படி, நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தினை சம்பந்தப்பட்ட சர்வேயரின் மூலம் கிராம நிர்வாக அதிகாரியின் துணைக்கொண்டு சட்ட விதிகளுக்கு உட்பட்டு இருதரப்பில் வழங்கும் ஆவணங்களின் அடிப்படையிலும் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய

உத்தரவிடப்படுகிறது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தினை தாக்கல் செய்ய திரும்ப அழைக்க நாள்: 10.02.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.01.23 16:25:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**<u>இணைப்பு:–</u>**

1. **<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>** **<u>மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை
2. **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>** **<u>மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.01.23 16:25:29 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.8/2025
இன்
அசல் வழக்கு எண்.320/2018
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்:23.01.2026